விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில்வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28ஆ திகதி ஆரம்பமாகு.

[புத்தகம்—ருஉ] யாழ்ப்பாணம்:— விக்கிரம ஹு கார்த்திகைமீ ௧0 உ (1940 நவம்பர் 25 திங்கட்கிழமை) [இலக்கம்—௬௬]


## ஜீவ உற்பத்தி

### The Origin of Life


மட்டுவில்
(பிரமஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர்)
'தில்லைவாசம்'


(முற்றொடர்)

கடற்கரைகளிலும், ஆறுகளிலும், வாவிகளிலும் சீவிப்பதுடன் நிலத்திலும் இவை ஏராளமாகச் சீவிக்க ஆரம்பித்தன. தங்கட்கு வேண்டிய உணவுகளையும், இருப்பிடங்களையும் பூமியிலே பெறத் தொடங்கின. தாவரங்களும் இவ்விதமாகவே பூமியில் வளர ஆரம்பித்தன. பூமியின் மேற்பாகமும் மேடும் பள்ளமுமுடையதாகக் காணப்பட்டதுடன் செழுமையிலு மதிகரித்தது. இதனால் சிறு தாவரங்களும் செழிப்புற்று ஏராளமாக வளர்ந்தன.

கடலில் நண்டினங்களும் அதிகரித்தவாவே கடலிலுள்ள பிராணிகளை புண்ணும்கணவாய்களும் (Cuttle Fish) ஏராளமாகப் பரம்பின. இக்காலத்தில் முதுகெலும்புள்ள (Backbone) பிராணி வர்க்கத்தின் தொடக்கமாயுள்ள கடற் செத்தைகளும் (Sea Squirts) ஏராளமாகக் காணப்பட்டன. இப்பிராணிகளுடைய தேக அமைப்பே பிற்காலத்தில் முதுகெலும்புடைய மீனகளாகத் தோற்றின. இத்தகைய முதுகெலும்புடையதும், முடிபோன்ற தலையுடையதுமான மீன்களே பிற்காலத்தில் முதுகெலும்புடைய பிராணி வர்க்கங்களின் (Vertebrati) உற்பத்திக்கும் ஆதாரமாயின. இவ்வாறாக அநேக பிராணிகள் விதம் விதமாகக் காலத்துக்கேற்றவாறு தோன்றி அழிந்து வந்தன.

பத்துக்கோடி வருடங்கள் சென்ற பின்னர் ஓர் நூதனமான மீன் தோற்றியது. இம் மீனானது நீரிலும் நிலத்திலும் சீவிக்கத்தக்கதாயும், இரு மடங்களிலிருந்து காற்றைச் சுவாசிக்கத் தக்க சுவாச அவயவமும் (Gills) சுவாசப்பையும் (Lungs) ஆகிய இரு உறுப்புக்களை உடையதாகவுமிருந்தது.

தற்காலத்தில் தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா முதலிய இடங்களிலும் நீரிலும், நிலத்திலும் சீவிக்கத்தக்க (Amphibious) மீன்களை யொத்த சேற்று மீன்கள் (Mudfishes) காணப்படுகின்றன. இம்மீன்கள் ஆறுமாதகாலம் நிலத்தின் புதைந்து சீவிக்கும். அப்பொழுது தன்னிலையைத் தன்ன ஓர் குழாயின் மூலம் காற்றைச் சுவாசிக்கும். மாரிகாலத்தில் வழமைபோல் காற்றை உட்கொள்ளும். பாறைகளிற் காணப்படுவதாகிய இத்தகைய மீன்களின் எலும்புக் கூடுகளுடன் தேள்களும் (Scorpions)காணப்படுகின்றன. இதனை நோக்குமிடத்து சீவ உற்பத்தியானது நீரிலிருந்து நிலத்தையடைந்தவிட்ட தென்பது தெளிவாகிறது. நீரிலும் நிலத்திலும் வசிக்கத்தக்க பிராணிகள்கடலிற் றோன்றிப் பிறகு தரையையடைந்து தரையில் வசித்தற் கேற்ற அமைப்பைப் பெற்றதற்கிடையில் மூன்று அல்லது நான்கு கோடி வருடங்கள் சென்றன.

தேகசவுக்கியமானது சார்தமுடையதாகவும் ஈரலிப்புடையதாகவும் காணப்பட்டதால் பூமியில் பலவிதமான பாசிகளைச் சேர்ந்தவும், கொட்டையை சேர்ந்த விருட்சங்களும், படர்கொடிகளும், உஷ்ணவலய தாவரங்களும் வளரத் தொடங்கின. இதுவே நிலக்கரிக்கால (Coal age) ஆரம்பமாகும். ஆனால் இவைகளுள் பட்சிகளாவது மிருகங்களாவது சீவிக்கவில்லை. எறும்புகளும், வண்டுகளும், வெட்டுக்கிளிகளும், தத்தைகளும, மரஅட்டைகளும் மாத்திரமும் சீவித்தன. இவைகள் சீவித்தவின் பயனாகப் பூண்டுகள் மிகச் செழிப்படைந்ததால் புஷ்பங்கள் தோற்ற ஆரம்பித்தன.

மீன்கள் மிகச் சிறியனவாகவும், திமிங்கிலம் போல் மிகப் பெரியனவாகவும் ஏராளமாகக் கடலிற் காணப்பட்டாலும், அவற்றிலும் பார்க்க நீரிலிருந்து நிலத்தில் வசிக்க வந்த பல்லியை யொத்த ஓர் பிராணியே சீவவர்க்க வளர்ச்சியில் மிகப் பிரதான்னிய மடைந்திருக்கிறது. இப்பிராணியானது தனது பழக்க வழக்கங்களையும் தேகஅமைப்புகளையும் இடத்துக்குத் தக்க விதமாக மாற்றி நீரில் வாழும் தன்மையை (Aquatic) அறவே மறந்து விட்டது.

இருவித சுபாவமுள்ள இப்பிராணிகளிடத்தே அநேக ஆண்டுகளாகச் சுவாசப் பைகளும், சுவாச அவயவங்களும் அமைந்திருந்தாலும், காலடைவில் இவைகள் அநேக மாறுதல்களை யடைந்தன; எவ்வாறெனில் நீரை உதைத்துத் தள்ளிய துடுப்புகள் (Fins) கால்களாகவும் இணைக்கப்பட்ட உறுப்புகள், விரல்களும்


தொடர்ச்சி 4ம் பக்கம்


## ஆலய மந்திரங்கள்

[ஸ்ரீமத் சு. சிவபாதசுந்தரம் B. A அவர்கள் எழுதியது]

சுத்தமாம் விந்து தன்னிற்
றோன்றிய வாதலானும்
சத்திதான் பிரேரித் தப்பின்
னதிட் டித்துக்கொண்டே
யத்தினுற் புத்திமுத்தி யளித்தலா
லானுமென்றே
வைத்தவா மந்திரங்கள் வடிவென
மறைகளெல்லாம்
சித்தியார், சுபக்கம்: ௧ சூ; ௩௩ திரு.

இதற்கு மறைஞானதேசிகரது உரை வருமாறு:—

இ-ள்: சுத்தமாம் விந்து தன்னில் தோன்றிய ஆதலானும்-மந்திரயோனி மகாமாயா என்னும்வாக்கியமுண்டாதலால், விந்துவின்கட் டோற்ற முண்டாகையானும்;-சத்திதான் பிரேரித்தப் பின்தான் அதிட்டித்துக்கொண்டே-அந்த மந்திரங்களைப் பராசத்தி தானே தோற்றுவித்து, பின்பு அதனைச் சத்திதானே அதிட்டித்துக்கொண்டே நிற்கையானும்;—அத்தினுல்—அந்தக் காரணத்தினுலே,—புத்தி முத்தி அளித்தலால்-இந்த மந்திரங்கொண்டே சிவபூசை அக்கினிகாரியம் ஜபம் முதயவற்றால் வழிபட்ட ஆன்மாக்களுக்குப் போக மோட்சங் கொடுக்குஞ் சாமர்த்தியம் உண்டாகையினுலே;—அானுக்கு என்றே வைத்தவா மந்திரங்கள் வடிவென மறைகள் எல்லாம்-வேதாகமங்களெல்லாம் சிவனுக்கு மந்திரமே திருமேனி யென்று அறுதியிட்டுச் சொல்லகிற்கும்.

மந்திரங்களைச் சிவசத்தி தோற்றுவித்து அதிட்டித்துக்கொண்டு நிற்கையினுலே சிவபூசை அக்கினிகாரியம் முதலிய ஆலயக் கிரியைகள் அவற்றுற் பயன்பெறும் என்பது இத் திருவிருத்தத்தாற் றெருட்டப்படுகின்றது. ஆதலால் இம் மந்திரங்கள் ஆலயங்களுக்கு இன்றியமையாதனவாகின்றன. இவற்றை நீக்குதலேனும், இவற்றுக்குப் பதிலாகச் சிற்றறிவினையுடைய யாம் தமிழிலேனும், தெலுங்கு, முதலிய வற்றிலேனும், மந்திரங்களை ஆக்குதலும் அவத்தொழி லென்பது சொல்லாமலே யமையும். தேவார திருவாசகம் முதலிய திருமுறைகள் ஞானவான்களுடைய திருவாக்குகளாதலால் அவைகளும் பராசத்தியால் அதிட்டிக்கப்பட்டுப் பயன்தாதத்கனவகளேயாம். ஆயினும் அவைகள் இன்ன கிரியைக்கு இன்ன திருமுறை யென்று ஞானவான்களால் வகுக்கப்படாதிருத்தலால், அவைகள் கிரியைகளுக்குச் சிறப்பாக உரியனவாகா.

மந்திரங்கள் வடமொழியிலுள்ளன வென்றும், அவற்றைத் தமிழிலாக்குதல் தமிழருக்குரியதென்றும் கூறுவோர் சிலருளர்.

சம்ஸ்கிருதம் பரதகண்டத்திலுள்ள யாவருக்கும் பொதுமொழியாய்ச் சாஸ்திரபாஷையாய் உள்ளது, "அன்றியும், ஆரியச்சொல் எல்லாத் தேயத்திற்கும் விண்ணுலகம் முதலியவற்றிற்கும் பொதுவாகலால்" என்றார் சிவஞான முனிவரும். (தன்னூல் விருத்தி, சொல் ௧௬.)

தமிழர்கள் தமது இலக்கியத்தைத் தமிழிலும் சாஸ்திரத்தைச் சமஸ்கிருதத்திலும் பண்டுதொட்டுச் செய்துவந்தனர். தமிழ்க்குரவராகிய உமாபதிசிவம் பௌட்கர பாடியத்தையும், சிவாக்கிரயோகியர் சிவஞானபோத பாடியத்தையும், எமது யாழ்ப்பாணத்துக் குரவராகிய ஞானப்பிரகாசர் பௌட்கராகம விருத்தி முதலிய ஒன்பது நூல்களையும் சம்ஸ்கிருதத்தில் இயற்றியமை அது தமிழருடைய சாஸ்திரபாஷை என்பதற்குச் சான்றாகும். இப்படியே பரதகண்டத்திள்ள ஒவ்வொரு சாதியாரும் தத்தம் சாஸ்திரங்களைச் சம்ஸ்கிருதத்தில் எழுதிவந்திருக்கின்றனர். ஆதலால், சம்ஸ்கிருத மந்திரங்கள் தமிழருக் குரிமையானவைகளேயாம்.

அன்றியும் மந்திரங்கள் மொழிபெயர்க்கப்படத் தக்கவைகளல்ல. தந்தையர்கள் இடுகுறியாக வைத்த வேதாசலம் பாலகிருஷ்ணன் என்னும் பெயர்களை அப் பெயருடையோர் முறையே மறைமலை சின்னக்கறுப்பன் என்று மாற்றியது குறைபாடியாதயின்று. மந்திரங்கள் அங்ஙனம் மாற்றப்படத் தக்கவைகளல்ல. அவைகள் விந்துவினின்றும் பராசத்தியாற் றோற்றுவிக்கப்பட்டவை. அவற்றை மொழிபெயர்க்கில், அம்மொழி பெயர்ப்பைச் சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய யாமே தோற்றுவி பவராவர். ஆதலால், அவை சிவசத்தியின் பிரேரகத்தைப் பெறமாட்டாவாய்ப் பயனற்றவைகளாகும்.

முக்கியமான மந்திரங்கள் மொழிகளல்ல. ஆதலாலும், அவை தமிழில் மொழிபெயர்க்கப்படத்தக்கவையல்ல. மந்திரங்களுக்கு முதலிலே வருவதாகிய பிரணவம் ஐந்து எழுத்துக்களேயன்றி மொழியன்று. அதிலுள்ள ஐந்து எழுத்துக்களும் முறையே ஐந்து பொருள்களைக் குறிப்பன என்பது.

"இறைசத்தி பாச
மெழில்மாயை யாவி
உறநிற்கு மோங்காரத் துள்."

என்னுந் திருக்குறளாற் பெறப்படுகிறது. சிவமூலமந்திரமும் மொழியன்று. அது ஐந்து எழுத்துக்களாய் ஐந்து பொருள்களைக் குறிப்பது என்பது.

"ஊன நடன மொருபா
லொருபாலாம்
ஞானநடந் தானடுவே நாடு"

என்பதனுல் அறியப்படும். இத் திருவைந்தெழுத்தேகாராதியாயும் சிகாராதியாயும் ஓதப்படும்போது வெவ்வேறு பயனைக் கொடுக்குமென்பர். அதைத் தமிழாக்குதல் எவ்வாறு?

—சைவசாந்திரபரிபாலனம்

## நிர்வாகசபையை விஸ்தரிக்க ஆதரவில்லை

—0—

### ஆனுல் ஆலோசனையைக் கைவிடவில்லையாம்

இந்திய வைஸ்ராயின் பிரசங்கம்

புதுடில்லி, நவ 20—

இந்திய மத்தியசட்டசபையின் இரு சபைகளும் சேர்ந்த கூட்டத்தில் வைஸ்ராய் லின்லித்கோ பிரபு இன்று பேசும்போது தமது நிர்வாகசபை விஸ்தரிப்புக்கு இந்திய அரசியல் தலைவர்களிடமிருந்து எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லையென்று தெரிவித்தார். நிருவாக சபை விஸ்தரிப்பு ஆலோசனை இவ்வாறு முடிந்ததுபற்றி உண்மையில் பிருத்தானிய அரசாங்கத்தாருக்கு மிகுந்த வருத்தமென்பதையும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

வைஸ்ராய் மேலும் தமது பிரசங்கத்திற் குறிப்பிட்டதாவது:—

"எனது ஆலோசனைகள் இந்திய மகா ஜனங்களிடமே உண்மையான அதிகாரத்தையும் பொறுப்புகளையும் ஒப்புவிப்பவையாகும். அவற்றை மாத்திரம் அரசியல் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தால்நெருக்கடியான இந்தச் சமயத்தில் தேசத்தின் ஒற்றுமையைப் பாதுகாத்துக்கொள்வதற்கும், எதிர்காலத்தில் எல்லோருஞ் சம்மதிக்கக்கூடிய முறையில் அரசியற் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கும் பெரிதும் உபகாரமாயிருந்திருக்கும். இந்தப் பிரச்சினைகளைப்பொறுத்தவரை அரசியல் தலைவர்கள் இப்போது இதைவிட எதுவுஞ் செய்யமுடியாது,

குறித்த ஆலோசனைகளை வாபஸ் வாங்கிக்கொள்வதாகப் பிருத்தானிய அரசாங்கம் உத்தேசிக்கவில்லை. இன்னும் இவ்வாலோசனைகளுக்குப் பொதுஜனங்களின் பிரதிநிதிகள் மூலம் போதுமான ஆதரவு கிடைக்கும்போது அவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்குப் பிருத்தானிய அரசாங்கத்தார் தயாராக இருக்கின்றனர்.

ஆனுல் இதுவரையிலும் அத்தகைய ஆதரவு கிடைக்காததால் இத்தச் சமயத்தில் நான் எனது நிர்வாகசபை விஸ்தரிப்பையோ அல்லது யுத்த ஆலோசனைச் சபையை அமைக்கவோ ஆரம்பிப்பது சரியில்லை யென்று பிருத்தானிய அரசாங்கத்தார் தீர்மானித்துவிட்டனர்.

### நிதி மசோதா திருப்பி அனுப்பப்பட்டது

கேற்று மத்திய அசெம்பிளியில் நிராகரிக்கப்பட்ட நிதி மசோதாவை ஒருவாறு திருத்தி இன்று மந்திரியானம் அதை அசெம்பிளிக்குத் திருப்பி அனுப்பியிருப்பதாகவும் வைஸ்ராய் அறிவித்துக்கொண்டார்.

## விநாயக புராணம்


சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை


பார்க்கவ புராணமெனவும் வழங்கப்படும் இப்புராணம் மூத்தபிள்ளையாரின் மான்மியத்தைக் கூறுவது. மாதவச் சிவஞான யோகிகளின் முதன் மாணாக்கரான கச்சியப்ப முனிவர் என்னுங் கவிஞர்பெருமானுல் இற்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் இயற்றப்பட்டு சென்னை மல்லீசுரர் கோயிலின் அரங்கேற்றப்பட்டது. சொற்சுவை பொருட்சுவை பத்திச்சுவை முதலியவற்றாற் சிறந்தது. உபாசனகாண்டம், லீலாகாண்டம் என்னும் இரண்டு பிரிவினை யுடையது. 6225 செய்யுட்களைக் கொண்டது. விநாயகப் பெருமானைப் பூசித்துப் பேறுபெற்றவர்களின் சரித்திரங்களை விளக்குவது. விநாயக சதுர்த்தி விரதம், விநாயகசட்டி விரதம், அறுகு, வன்னி முதலியவற்றின் மகத்துவம் விநாயகசகத்திர நாமம் விநாயகமந்திரம் முதலானவற்றை விரித்துரைப்பது. சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்கே எடுத்தியம்புவது. பலநீதிகளைப் புகட்டுவது. இத்தகைய சிறந்த புராணம் இப்போது கிடைப்பதருமையென்றுல் நமக்கெல்லாம் வெட்கமன்றோ? இது இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் சென்னையில் ஓர் விநாயக பக்தரால் தஞ் செலவில் அச்சிடப்பட்டது. விநாயகப் பெருமான் யாவரும் முன்னுற வணங்கும் மூர்த்தியாதலால் அவரது மகிமையைக் கூறும் இவ்வரே தமிழ்ப்புராணத்தை மீட்டும் அச்சிட்டு வெளிப்படுத்தவேண்டியது அத்தியாவசியமேயாம். பத்துப் பதினைந்து தருமசீலர்கள் சேர்ந்தால் இப்புராணத்தை அச்சிடத்தொடங்கலாம். என்வரையில் யான் 25 ரூபா நன்கொடையாக அளிக்கச் சித்தமாயிருக்கிறேன். அச்சிடவேண்டிய பல உதவிகளையுஞ் செய்யத்தடையில்லை. ஏனைச் சைவாபிமானிகள் துணை புரிந்தால் இச் சற்கருமத்தை நிறைவேற்றலாம். மாதிரிச் செய்யுள் ஒன்று தருகின்றேன்.

ஒருப்படு மறத்தினுலே யொண்
பொரு ளின்பஞ் செம்பொற்
பருப்பதம் கடல்போல் வந்து
பயப்படு மதனைக் கண்டோர்
விருப்பொடு வெறுப்பிலாத மிக்க
வெண்குணத்தோ டொன்றுய
இருப்பவன் யாவனன் னுனிணைபடி
வணங்கல்வேண்டும்.

## இந்திய இயங்கோவியம்


"புலவர் பாண்டியனுர்"


(முற்றொடர்)

### பாட்டின் பகுதி

பாடுந் திறமைக்குத் தனி முதன்மை பலமுறையினுங் கொடுத்துவருகின்றனர். பாடும் படக்காட்சியாய் இருப்பதால் பாட்டுத்திறமைக்கு உயர்விடங் கொடுப்பதை மறுக்க முடியாது; உண்மை. ஆனுல் அளவுக்குமிஞ்சிய உயர்விடங்கொடுப்பது அடாது; ஏனெனில் பாடுந் திறன் பெற்ற எல்லாரும் நடிப்புத்திறனும் ஒருங்கே அமைந்திருக்கமுடியாது. என்பது நாமெல்லோரும் கண்டறிந்ததே. ஆகையினுல் நடிப்பு இயக்குவோர், கேலிக்கிடமாய், நடிப்பும் ஒருங்கே அமையப்பெறாத தலைவன் தலைவிகளின் பாடல்களை இடையிடையேபுகுத்திப் படங்களை அழுகுபடுத்த நினைக்கக்கூடாது. அதற்கு மாறாகப் படமே பாழ்பட்டுப் போகும்; "உள்ளதும் போச்சு, பிள்ளை பள்ளிக்குப்போய்" என்றெல்லோரும் கைகொட்டிக் கொல்லென்று நகைத்துவிடுவர். மேலும் இந்தியப் படமெடுப்போர், எப்படியோ, சிறிதும் வேண்டாத இடத்திலும் பாட்டைப் புகுத்தும் திறன், வசம், கொடை பெற்றிருக்கின்றனர். இது நம் படங்களிற் காணுந்தோறும் வருந்துவதற்கு இடமாகின்றது. அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு, சற்று எண்ணிப்பாருங்கள். ஒருபெண் தன் கணவனே அன்பனே இறந்ததும், தன் கவலையைப் பாட்டு வழியாய்ப் பக்கமேளதானங்களுடன் வெளியிட ஆரம்பிக்கிருள். உள்ள உளைவும், ஓங்கிய நோவும், ஊறும் உணர்ச்சியும், ஒல்லா மயக்கமும், ஓவ்வாத் தளர்ச்சியும் மேலிடுங்கால், மேளதானங்களுக்கிடை ஒத்துழுத்து, உரத்துவங்கினத்தும் உரப்பியும் பாடமுடியுமா என்று பலர் பற்காட்டிச் சிரிக்கவும், சீ சீ என்று வெறுக்கவும் இடமாகின்றது. 'சுவையே அழிக்கது. சூழலுந் தொலைக்கது; சுற்றுணர்ச்சியும மடிக்கது' என்று முணுமுணுக்கின்றனர் சிலர். ஒருவேளை எல்லாம் இசை மயத்திலேயே இறப்பவும் இவ்புதும் தமிழனுக்கொருத்தி இயற்கை இன்பம் இன்னும் கடமாடும் நாட்டுப்புற நங்கைபோல், ஒப்பாசியும், புலம்பலும் ஓதலாம் என்றுலும், நன்கு படித்தறிந்தோர், அதை நாகரிகமற்றது, அவலச் சுவைக்கு அடாதது, அறிவுக்கொவ்வாதது என்றே ஒதுக்குவர். என்ன? பேசவும் முடியாமல், நாவெழாமல் கையுற் அவ் வமையம் ஆழ்ந்த அமைதியும், தாழ்ந்த தன்மையும், இரக்கப் பார்வையும், தளர்ந்த நிலையும், வெருண்ட விழியும், கழித்த வாயும், சோர்ந்த குழலும், வீழ்ந்த உடையும், கன்றிய கன்னமும், கருத்துக்குப் பொருந்திய முகச்சொல்லும் பொருந்தப் பெறுமானுல், அதுவே பாட்டினும் பதின்மடங்கு நாவன்மையுடன், வந்த கேட்டை நவிலுமன்றோ?

### நடிப்புத் திறன்

அளவுக்கு மிஞ்சிப் பாட்டிற்குப் படக்காரர் இடங் கொடுக்கிருர்கள் என்றேமே, அளவுக்கு மிஞ்சாவிட்டாலும் அதிக அளவுக் கவலை, நடிப்புத்திறனுக்கு காட்டவேண்டும். அதுவே சிறந்த இயங்கோவியங்கள் எழச்செய்யும், நடிப்புத்திறன் ஒரு நன்கொடை. அது எல்லோருக்குங் கிடைக்கும் பிறவி உரிமையன்று. எளிதில் அடைய வல்ல செயற்கைச் செல்வமும் அன்று. வாலிதிலும் வளமாய் வாய்க்கக்கூடிய வன்மைபண்டமும் அன்று. நடிப்புத்திறன் இயற்கை; செயற்கையன்றே என்றுலும் இயற்கைத் திறன் செயற்கை நலத்தான் உயர்வு பெறும். ஆகையால் இயற்கையும் செயற்கையும் சேர்ந்த நடிகரே என்றும் செயல்பெறுவார்; செல்வமடைவர் புகழடைவர்.

### இயக்குவோர்

இதன்மேல் இயக்குவோரைப் பற்றிய கேள்வி கிளம்புகின்றது. நமது நாட்டிலுள்ள நடிப்பு நடத்துவோர் பலர்க்கு நடத்தலைப்பற்றிய ஆனு ஆவன்னு முதலாகத் தெரியாது என்பர். இப்படிப்பட்ட இயக்குவோரே எளிதாய்க் கிடைக்கக்கூடியவர்களாயிருப்பதால் இயங்கிவின் வருவாயே கருதும் முதலாளிகள், இவர்களை ஆளாய்த் தேடிப் பிடிக்கிறுர்கள். அது தற்கொலையாகி விடுகிறது. ஏனெனில் இயங்கோவியக் கலையின் நுட்பங்களைக் கைத்தொழில் முறையிற் கையாள உயர்ந்த பழக்கமும், மனநிலைக் கலையில் தலைமையான அறிவும், மக்கள் வாழ்க்கையில் உண்மையான உணர்ச்சியும், நடிப்புத்திறனின் நலனும் நன்கமைந்த இயக்குவோரே படஎழுச்சியை வெற்றிபெற நடத்த முடியும் என்பதற் கையமில்லை. படத்தொழில் வீழ்ந்திருக்கும் கொடிபிலிருந்து வெளியேறவேண்டுமானுல், படமுதலாளிகள் பணப்பேராசையைச் சிறிது மேற்கொண்டு தணிக்கவேண்டும்.

### காலச் செய்தி

படமெழுப்புவோர் கருத்தில் வைக்கவேண்டியது இன்னென்று. அது படம் ஓடவேண்டிய நோக்கத்திற்கும், எடுத்துக்கொண்ட பொருளுக்கும், நடக்கும் இடத்திற்கும், எழுந்த காலத்திற்கும் தகுந்த செய்திகளையும் செயல்களையும் இடைப்பொருத்துதல், அது மக்கட்கு அரியமுறையில் அறிவூட்டும். "நம் எல்லா முன்னேற்றமும்—அரசியல் சமூகப், பொருள்நிலை—இறுதியில் நம் பொதுமக்களின் கல்வியறிவு நிலையைப் பொறுத்ததாகும்" என்று பண்டிதமணி சவகர்லால்நேரு கூறுகிறுர்; எனின், பேசும் படக்காட்சியை விடப் பெரிதான கேள்வி இன்பமும் கல்வியறிவும் ஊட்ட வல்லது எது? ஏனெனில் குளிர்ந்த குரல் கேள்வியாலும், குறிபெறுங் கண் பார்வையாலும் கற்பிப்பது இயங்கோவியம் ஒன்றே அரசியற் கொள்கைகளை அப்படியே பரப்புவதற்கு அமைந்த கருவி. ஏன் காலச் செய்திகளைக் கலந்துவிடுவதில்லை என்றுல், அத்தகைய செய்திகளைக் கேட்க விரும்புவாரும மிகச் சிலரே. ஆனுல் அரசியலார் அவ்வக்காலச் செய்திகளை அழகுற இடை அமைக்க நினைப்பூட்ட விழிப்பாயிருக்கவேண்டும். இதில் பொது மக்களுக்கு ஒரு கடமை இருக்கின்றது. சிறந்த தன்மை வாய்ந்த படங்களையும் உயர்ந்த நடிப்பையும், சீரிய ஆயத்தமுறையையும், மக்கள் விரும்புவார்களானுல், படமுதலாளிகள் கொடுத்தே தீரவேண்டும். இவ்விதமாய்ப் பொதுமக்களின் இன்பமும் சுவையும், பொதுவில் படங்களின் உயர்வையும் செவ்விதாய் ஓங்கச் செய்யும்.

### செம்மறியாடுகள்

இயங்கோவியத் தொழிலால் ஏராளமான பொருள் வருவாய் உண்டென்று, எண்ணிக்கை இல்லா முதலாளிகள் படமெழுப்ப எத்தனிக்கின்றுர்கள். நல்லதே. ஆனுல் அவர்கள் மேல் சுமந்துள்ள கடமையும் அடிக்கடி அகத்தில் அறிந்து நினைப்பூட்டிக்கொள்ள வேண்டும். அவர்கள் நோக்கம் இயற்கையும் உண்மையும் புதுமையுமான படமெழுப்புவதாய் இருக்கட்டும். செம்மறியாடுபோல் சேர்ந்த இடத்திலே சேர்வதோ, விழுந்தான் மேல் விழுவான்போல் எடுத்ததையே திருப்பித் திருப்பி வெவ்வேறு பெயருடன் படம் எடுப்பதோ பொதுமக்களைக் களைப்படையச் செய்யும்.

### படக்கூடங்கள்

புதுப் படத் தொழில் கூட்டங்களுடன், புதுப் படக் கூடங்களும் மண்டபங்களும் கிளம்புகின்றன. ஆகையால் புது முதலாளிகள் மெய்யாகவே நல்ல படம் எழுப்பவேண்டும். இன்றேல், முதலாளியும் கூட்டமும், படக்கூடமும், பட்டுக்கொள்ளும்.

### முடிவு

இவ்வளவாக இந்தியப் படத்தொழில் தலைவர்கள் நல்ல நடிகர்களையும், கலைநுட்பங் கைவந்தோர்களையும், நன்கு இயக்குவோர்களையுங் கொண்டு சிறந்த படம் எழுப்புவார்களாக. அப்படியாயின், பொதுமக்கள் படப்பற்றுக் கொண்டோராவர். இயங்கோவியத்தில் இன்பம் வைப்பர். இயங்கோவியத்தின் இணையற்ற செல்வாக்கை, எவரே எடுத்தியம்ப முடியும்? இன்பந்தருங் கலைத்த கருத்திற்கு இணைப் பாற்றியளிப்பது எது? நல்ல கருத்துக்களை நாநிலம் முழுவதும் நல்ல முறையில் நடுவது எது? அறியா மக்களுக்கு அகவிருளகற்றி அறிவொளி வீசுவதெது? இடம் பொருள் ஏவற்கேற்பப் பேசியும், படித்தும், நடிக்கும் அழகமைந்த இயங்கோவியம் அன்றோ! புதுவது புனையும் விருத்தெல்கே (Novels),நாடக மேடை எங்கே, இசைக்கூட மெங்கே, இயல்மண்டபமெங்கே, பொம்மைக்கூத்தெங்கே, எல்லாம் இயங்கோவியத்தின் முன் பொம்மலாட்டமே; ஞாயிறு முன் மின்மினியும், புன்னுனிப் பனியுமே, ஏன்? இவையெல்லாம் ஒருங்கே படக்காட்சியில் அமைந்ததுதான் என்க, படத்தொழிலாளர்களே! புதிதும், புனிதமும் வாய்ந்த படப் படிவங்களைப் பாருங்கள். அவை மென்மேலும், புத்துணர்ச்சியையும், புத்தெண்ணங்களையும், புத்தித் தெளிவுள்ளங்களையும் எழுப்பட்டும். இம்முறைகளைக் கையாண்டுவந்தால், மற்றைநாட்டவரிலும் 'மிக்கவராகாவிடினும், ஒத்தவராகவாவது கருதப்பெறுவமல்லவோ!

—செந்தமிழ்ச் செல்வி

## நகைக் கடையிற் பொலிஸ்சோதனை

### களவு போன சாமான்கள் கண்டு பிடிக்கப்பட்டன

தகவல் கிடைத்ததின் பேரிற் கொழும்பைச் சேர்ந்த இரகசியப் பொலிஸார் சென்ற புதன்கிழமையன்று புறக்கோட்டையிலுள்ள நகைக்கடை பொன்றைப் பரிசோதனை செய்து பல விலையுயர்ந்த பொருட்களைக் கண்டு பிடித்தனர். அவற்றிற் பெரும்பாலானவை உடைந்து போயிருந்த போதிலும்இனங்கண்டு கொள்ளுவதற்கான அடையாளங்கள் இருக்கின்றன.

கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களில் ஒன்றில் 'எல், எச்' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. இது பிரதம நீதிபதியின் மகளான செல்வி எல். எச். ஹோவார்டின் காரிலிருந்து சென்ற ஜுலை 19-ந் திகதியன்று களவாடப்பட்ட சாமான்களில் ஒன்று என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு தங்கப் பொத்தான்கள், மூன்று வெள்ளிச் சிகறெற் பெட்டிகள், இரண்டு வெள்ளிக் கடிகாரங்கள், கண்டியன் வேலைப்பாடுள்ள ஒரு சிகறெற் பெட்டி மூடி, இரண்டு வெள்ளிக் கடிகார மூடிகள், ஒரு சிறிய 'பொக்கெற்' கடிகாரம் முதலியவை உட்படப் பல சாமான்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

## தேர்தல் வாக்குப்பதிவு ஒத்திகை

களுத்துறை நவ 19—

களுத்துறை உதவி மாகாணத் தலைவர் திரு. பி. ஜே. ஹட்சன் அடுத்துவரும் பட்டினசபைத் தேர்தலில் அதிகாரிகள் எப்படி நடத்துகொள்ளவேண்டு மென்பதை அறிந்துகொள்ளுவதற்காக இன்று காலை அவர்களுக்குத் தேர்தல் ஒத்திகையை நடத்திக் காண்பித்தார். தேர்தலின் சகல அம்சங்களும் ஒத்திகையிற் காணப்பட்டன.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழகதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விக்கிரம ஹு கார்த்திகைமீ க0உ திங்கட்கிழமை

## நாவலர் குருபூசை

சென்ற வெள்ளிக்கிழமை (22-11-40) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் குருபூசை யாழ்ப்பாணத்திலே அப்பெரியார் தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலிய சைவ உயர்தரக் கலாசாலைகளிலும் வட இலங்கையிலுள்ள சைவத் தமிழ் ஆங்கில வித்தியாசாலைகளிலும் அப்பெரியார் பெயரால் வழங்கும்வாசிகசாலைகளிலும், இலங்கையின் மற்றைப் பாகங்களிலுள்ள கொழும்பு கண்டி முதலாம் பட்டினங்களிலும் ஆங்காங்குள்ள சைவாபிமானிகளாற் பயபக்தியோடு நடத்தப்படலாயிற்றென அறியலானேம். தென்னிந்தியாவிலுஞ் சிதம்பரம் சென்னை முதலாம் பட்டினங்களில் நாவலப் பெரியார்தினம் நன்கு நடைபெறுதல் கியதியாய் விட்டது.

சைவ நற் சமயத்தின் பொருட்டும் செந்தமிழ் மொழியின் பொருட்டும் நாவலப் பெருந்தகையார் செய்த தொண்டு சைவத் தமிழகத்தில் எஞ்ஞான்றும் புதியனவாய் விளங்குகின்றன. அக்காலத்திலாக இக்காலத்திலாக, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களைப் பாராட்டாத சைவமக்களுமில்லை; தமிழ் மக்களுமில்லை. அந்நிய சாதியிற் பிறந்த அந்நியசமயத்தை அநுசரித்த டக்டர் போப் முதலாயினோரும் நாவலரவர்களைப் பாராட்டியேயுள்ளார்கள். இந்த யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் நடாத்தப்படும் சைவத் தமிழ்க் கலாசாலைகளும் ஆங்கிலக் கலாசாலைகளும் இப்பெரியாரின் உள்ளக் கிடக்கையைப் பின்பற்றியே தாபித்து நடத்தப்படுவன என்பது இங்குள்ளாரெவருக்கும் ஒத்த துணிபாகும். இச் சைவ வித்தியா தாபனங்கள் பலவற்றில் நாவலரவர்கள் குருபூசை நடத்தப்படினும் அப்பெரியாரைப் பற்றிப் பாராட்டிப்பேசப்படினும்; இக்காலத்தில் அப்பெரியார் கைக்கொண்டு போதித்தும் சாதித்தும் வந்த சமயக்கல்வி நீதிஉநற்கல்வி சைவசமய ஆசாரம் தமிழ்மக்களுக்குரிய ஒழுக்கம் முதலியன நாவலரவர்கள் கொண்டுள்ள நோக்கத்தின்படி பயிற்றப்படா தொழியலாயின வெனக் கூறுதல் மிகையாகாது; சிற்சில வித்தியாசாலையில் அம் மகானுடைய கொள்கைக்கு நேர்விரோதமான செயல்களும் நடக்கத் தலைப்பட்டுக்கொண்டன. ஆதலின் சைவமுறையில் வித்தையை யூட்டுந் தொடர்பு பூண்டவர்களும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தினத்தைக் கொண்டாடி அவரைப்பாராட்டி வருவதோடு நின்றுவிடாது அப்பெரியாரது போதனையையும் சாதனையையும் தாமுங் கைக்கொண்டு மாணுக்கரும் மற்றை இளைஞரும் கைக்கொண்டு நடக்கவுஞ் செய்தல் வேண்டும்.

## கால நிலை

சில தினங்களாக இங்கே தொடர்பாக மழைபெய்து வருகின்றது; இம்மழை நெற்பயிருக்குப் பெரிதும் பயன்படுவதாகும்.

## இலங்கை மரங்களுக்குக் கிராக்கி

### இங்கிலாந்துக்கு ஏற்றுமதி

கொழும்பு நவ 24

இலங்கையிலிருந்து நிறைய மரப் பலகைகளை அனுப்பி வைக்கும்படி குடியேற்றநாட்டு மந்திரி "ஆர்டர்" கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த மாதிரியான பலகைகள் துருப்புகள் தற்காலிகமாகத் தாக்குவதற்காகப் போடப்படும் முகாம்களுக்கு உபயோகப்படுத்தப் படுகின்றன என்று தெரிய வருகின்றது. நிறைய இப்பலகைகள் முன்பே அனுப்பப்பட்டிருக்கின்றன. இவைகளின் தேவை அதிகமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பல வியாபாரிகளிடமிருந்து பலகைகளை வாங்கி அரசாங்கத்தாரே முதன் முதலாக இங்கிலாந்திற்கு அனுப்பியிருக்கின்றார்கள் என்று அறியப்படுகிறது. காடுகளை வெட்டி இத்தகைய பலகைகளை உற்பத்தி செய்ய ஒரு திட்டம் போடப்படுமென்றுந் தெரிகிறது.

## இந்திய சத்யாக்கிரஹம்

### மத்திய மாகாணப் பழைய மந்திரிகள் கைது

நாகபுரி நவ 21

மத்திய மாகாணப் பழைய மந்திரியாகிய பண்டித துவாரக பிரசாத மிஸ்ரா ஜபல்பூரிலிருந்து 5 மைலுக்கப்பாலுள்ள ஒரு கிராமத்திற் பொதுக்கூட்டமொன்றிற் பேசி முடித்ததும், இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்பட்டார்.

மத்திய மாகாணப் பழைய தொழில் மந்திரியாகிய ஸ்ரீ இ. ஜே. பருக்கா இன்று பிற்பகல் ஒரு பர்லாங் தூரம் கால்நடையாகச் சென்று இரண்டுமுறை யுத்த எதிர்ப்புக் கோஷத்தைக் கோஷித்துச் சத்தியாக்கிரஹஞ் செய்கையில் இந்திய பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டார்.

### சென்னை மாகாணத்தில் 261 பேர்கள்

இம்மாத இறுதிக்குள் மகாத்மாஜியின் திட்டப்படி இம்மாகாணத்தில் ஸ்திரீகள் உட்பட 261 பேர்கள் சத்தியாக்கிரகம் செய்து சிறைசெல்லுவதனை எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 30-ம் திகதிக்குள் தங்களுக்குச் சௌகரியமான திகதிகளைச் சத்தியாக்கிரகிகள் நிர்ணயஞ் செய்து கொள்வார்கள் என்றுந்தெரிகிறது.

ஆந்திரதேசத்தில் முதலாவதாகச் சத்தியாக்கிரகம் செய்வதற்குத் தேச பக்தர் கொண்டா வெங்கடப்பய்யா பந்துலு தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆந்திரமாகாணக் காங்கிரஸ் கமிட்டி மசூலிப் பட்டணத்திற் கூடுகிறது. அது இதைப்பற்றி முடிவு செய்யும்.

## புகையிரதத் திருட்டுக்களைக் கண்டு பிடிக்க

### அதிகாரிகளின் முயற்சி

கொழும்பு, நவ, 24

அண்மையிற் புகையிரத டிவிஷனிற் போக்கு வரத்து இலாகாச் சுப்பிறிண்டெண்டேகள்கூடிப் புகையிரதத்தில் அடிக்கடி நடைபெறுந் திருட்டுக்களைப் பற்றியும் அத்திருட்டுகளை உடனுக்குடன் கண்டு பிடிக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது பற்றியும் ஆலோசித்தார்கள் என்று தெரிகிறது. அநேகமாக இரவு நேரங்களிற் போகும் புகையிரதங்களில் ஏற்பட்டிருக்கும் சாமான்களே அதிகமாகக் கொள்ளைபோவதாகவும் தெரியவருகிறது. இம்மாதிரிப் பொருள்களுக்கு நஷ்டஈடு புகையிரத அதிகாரிகளே கொடுக்கவேண்டி ஏற்படுகிறது. ஆகையால், இம்மாதிரியான கொள்ளையடிப்பதில் ஈடுபடும் திருடர்களைக் கண்டு பிடிப்பதற்குரிய சில பிரச்னைகளையும் முறைகளையும் அந்தக் கூட்டத்தில் புகையிரத டிவிஷனல் டிராபிக் வரத்து இலாகாச் சுப்பிறிண்டெண்டேகள் விவாதித்தார்கள் என்று தெரியவருகிறது.

## தேயிலையுஞ் சீனியும்

லண்டன், நவ, 21—

கிறிஸ்மஸ் பண்டிகை காலத்தில் சனங்களுக்கு அதிகமான தேயிலையும் சீனியும் கொடுப்பதற்கு உணவுக்கட்டுப்பாடு அதிகாரி ஏற்பாடு செய்திருக்கிறார்.

இப்பொழுது 8 அவுன்ஸ் சீனி கொடுக்கப்பட்டு வருகிறது. கிறிஸ்மஸ் பண்டிகையின் போது ஒருவாரகாலத்திற்குச் சீனிசிறிது அதிகமாகக் கொடுக்கப்படும் இக்காலத்தில் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சீனி, தேயிலை ஆகியவற்றின் திட்டமான அளவு இன்னும் நிர்ணயிக்கப் படவில்லை.

## சிலாபத்தில் 2 வார்டுகளில் தேர்தல்

—0—

### முடிவு விவரம்

சிலாபம் நவ, 22—

இன்று சிலாபம் பட்டினசபையின் 1ம் 6ம் வட்டாரங்களின் தேர்தல் புத்தளம் மாகாண த் தலைவர் திரு, ஆர். எம். ஜே. மணிப்பெனிதலைமையில் நடைபெற்றது. தேர்தல்முடிவு பின்வருமாறு:—

திரு. ஸப். எல். பெர்னாண்டோ 134 வாக்குகள்

திரு. சிரில்பெர்னாண்டோ 74 வாக்குகள்

6-ம் வாட்டு

திரு. பட்ரோனியுஸ் பெர்னாண்டோ-295 வாக்குகள்

திரு. வீ. ஏ. இசைராசா 102 வாக்குகள்

நாளைக்கு இரண்டாவது வார்ட்டில் தேர்தல் நடைபெறும்.

## கொலை வழக்கில் பிரதான சாட்சி

### பொய்ச் சாட்சியம் கூறியதற்கு 3 வருடச் சிறை

ஒரு கொலைவழக்கிற் பிரதம அரசாங்கத் தரப்புச் சாட்சியா யிருந்த ஒருவர் பொய்ச் சாட்சியங்கூறியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு அதே ஜூரர்களால் விசாரணை செய்யப்பட்டார்.

குறித்த கொலைவழக்கில் இரத்தினபுரியைச் சேர்ந்த பி. நிக்கலஸ் பெர்னாண்டோ என்னும் ஒரு சலவைத் தொழிலாளி அவரது தாயாரைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

அந்த வழக்கில் எச். எம். டி. யோனிஸ் என்பவர் பிரதமசாட்சியாகவிருந்தார். அவர் நிக்கலஸின் நெருங்கிய நண்பராக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் கீழ்க் கோட்டிற் சாட்சியம் கூறுகையிற கொலை நடந்த இரவு தாம் எதிரியுடன் இருந்ததாயும் எதிரி கொலை செய்ததைத் தாம் பார்த்ததாயும் தெரிவித்தார்.

கொழும்பு அசைஸ் கோட்டில் டியோனிஸ் சாட்சியங் கூறுகையில தமக்கு எதிரியின் தாயார் கொல்லப்பட்டமை சம்பந்தமாக ஒன்றும் தெரியாதென்று கூறினர்.

நிக்கலஸ் பெர்னாண்டோ விடுதலைபெற்றார். டியோனிஸ் பொய்ச் சாட்சியங்கூறிய குற்றச்சாட்டின் பேரில அதேஜூரர்கலால் விசாரணை செய்யப்பட்டார்.

விசாரணைமுடிவில் டியோனிஸ் குற்றவாளியென்று ஏகமனதாய்த் தீர்ப்பளித்தனர்.

ஆகவே டியோனிஸ் மூன்று வருடக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டார்.

## ஆறுமுகநாவலர் குருபூசைத் தினம்

வண்ணார்பண்ணைச்சமூகசேவைச் சங்கத்தின ஆதரவில் நடைபெறும் ஆறுமுகநாவலர் இலவச வாசிகசாலையின் நாவலர் குருபூசைத்தினம் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பூசை முடிந்தவுடன் சங்கீதக் கச்சேரி மாலை 6 மணிதொடக்கம் 9 மணிவரை நடைபெற்றது.

சங்கீதக் கச்சேரியின் இடையேவேளையில் திரு. மு. முத்துத்தம்பி அவர்கள் யாழ்ப்பாணத்து நல்லூரில் அவதரித்த ஆறுமுகநாவலர் தோன்றுவதின், பரசமய இருளினுல் மூடப்பெற்று யாழ்ப்பாணம் இன்று கேவல நிலை அடைந்திருக்கு மென்றும், சைவத்திற்கும் தமிழுக்கும் புத்துயிர் அளித்த நம் நாவலர் பெருமானின் திவ்விய தினத்தை யாழ்ப்பாணத் தமிழர்கள் எங்கும் கொண்டாட வேண்டுமென்றும், அன்னவர்களின் அழியாத் தொண்டையும், வீரத்தையும், சைவநெறியை வளர்த்தோங்கும் வண்ணம் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை ஸ்தாபித்தும் சைவத்திற்கும் தமிழுக்குமாகத் தம் வாழ்நாட்கள் முழுவதையும் தியாகஞ் செய்த புண்ணியசீலரின் புகழுடம்பு என்றும் அலகில நிலவி நிற்குமென்றும், அவர்களின் ஞாபகார்த்தமாக இக்காலை வெகு சிறப்பாக இச்சங்கத்தார் வருடந்தோறும் கொண்டாட வேண்டுமென்றும் இக்கொண்டாட்டம் யாழ் நகர் முழுவதிலும் பல இடங்களிலும் கொண்டாடப்படுமென்றும், அதிலும் வண்ணார்பண்ணையின் நாவலர் பெருமான் பலவருடங்களாக வசித்து வந்தும் பல பிரசங்கங்கள் செய்த இடத்தில் அவர்களின் ஞாபகமாக நிறுவப்பட்டிருக்கும் "ஆறுமுகநாவலர் இலவச வாசிகசாலை"யில் கொண்டாடாது விடுவது எங்ஙனமென்றும் ஆகையால் இதைக் கொண்டாடும் சமூக சேவைச் சங்கத்தாருக்கு நாம் நன்றியுடையோம் என்றும் கூறி முடித்தார். சங்கீதக் கச்சேரி முடிந்த பின் பிரசாதம் வழங்கப்பெற்றுக் கூட்டம் இனிது முடிந்தது.

அ.டி.த.

## மௌலானு ஆஸாத்தின் நம்பிக்கை

### சிறிது நெருக்கடி தீர்ந்து விடுமாம்

காசி நவ 20

காங்கிரஸ் தலைவரான மௌலானு அபுல்கலாம் ஆஸாத் நேற்று சிந்து சட்டசபையைச் சேர்ந்த முஸ்லிம் அங்கத்தினர்களுடன் 90 நிமிஷ நேரம் கலந்து பேசிய பின் பின்வருமாறு அறிவித்தார்.

'இன்று மாலை முஸ்லிம் அங்கத்தினர்களுடன் நான் 90 நிமிஷநேரம் கலந்து பேசினேன். இவ்விவாதம் எனக்குப் பூரணதிருப்தியளித்திருக்கிறது. எனது நோக்கம் இடேறுமென்று நான் நம்புகிறேன்.'

## இலங்கை மந்திரிகள் சென்னையி லிருந்து திரும்பினர்

### திரு சேனநாயகாவுடன் பேட்டி விபரம்

சென்னை நவ 22

இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையே டில்லியில் நடைபெற்ற பூர்வாங்க சம்பாஷணையை பொட்டி டில்லிக்குச் சென்றிருந்த இலங்கை மந்திரிகளான திரு. டி. எஸ். சேனநாயகாவும், திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவும் இன்று காலை சென்னைக்குத் திரும்பி வந்து சேர்ந்தனர். அவர்களை அசோஷியேடட்பிரஸ் நிருபர் பேட்டி கண்டு விசாரித்த பொழுது இலங்கை அரசாங்கத்துக்குத் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக டில்லி மகாநாட்டின் முடிவுகளைப் பற்றித் தாம் எதுவும் தெரிவித்துக் கொள்ள முடியாதென இலங்கைக் கோஷ்டியின் தலைவர் திரு. டி.எஸ். சேனநாயகா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:— இந்திய அரசாங்கமும், இந்தியாவில் நாங்கள் சந்தித்த எல்லோரும் எங்களிடம் காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும் நாங்கள் மிகவும் நன்றியுடையவர்களா யிருக்கின்றோம். உண்மையில் எங்களுடைய இந்திய சுற்றுப்பிரயாணம் மிகவும் சந்தோஷமாகவே இருந்தது.

இலங்கை இந்திய முடிவு பற்றித் திரு. சேனநாயகா தெரிவித்ததாவது:—

இரு தேசங்களுக்குமிடையேயுள்ள பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கான வழிகள் உண்டா என்று பார்ப்பதற்காகவே நாங்கள் வந்தோம். எங்கள் நிலைமையையும் அபிப்பிராயத்தையும் நாங்கள் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கு விளக்கி யுரைத்தோம். அவர்களும் தங்கள் அபிப்பிராயத்தை எங்களிடம்சொன்னார்கள்.

இலங்கை மந்திரிகள் இன்றிரவு கொழும்புக்குப் புறப்படுகிறார்கள்.

## சிற்பரச் செல்வர்

### சைவப்புலவர் - மணிவாசகம்

"உள்ளம் உருகில் உடனுவர் அல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற"

சிற்பரச் செல்வர் என்றால் அரியாகிய சிறந்த செல்வமுடையார் என்று பொருள். அவர்கள் இயல்பாகவே அரியாமையினின்று விளங்கும் இறைவரும் அவனருளான் ஆக்கிய ஐம்புலதொண்டரும் அவர்கள்.

உலகமும் உடலும் பிற கருவியும் இறைவன் தந்த கொடைப் பொருள்கள். இவைகளின் துணையால் உயிர் அறியாமையினின்றும் விடுதலை பெற்று அறிவை- இன்பை-வீட்டை அடைகிறது. இன்பம் பெறுதற்கு வாயில்கள் பலவாய அவைகள் யாவும் 'செல்வம்' எனப் பெயரும். நாமும் இன்பந் தரும் பொருள்களை 'செல்வமே' என்று அழைத்து மகிழ்கிறோம். செல்வம் இம்மைச் செல்வம், மறுமைச் செல்வம் என இருபிரிவுடையது. இம்மைச் செல்வம் பொருட்செல்வம் என்றும், மறுமைச் செல்வம் அருட்செல்வம் என்றும் கூறப்பெறும். பொருட்செல்வம் இவ்வுலக இன்பம் தரும் அருட் செல்வம் அவ்வுலக- துறக்க-இன்பந்தரும். இரண்டும் மக்கட்கு ஒருதலையா வேண்டுவன.

"அருளில்லார்க் கவ்வுலக மில்லைப்பொருளில்லார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு"

என்னும் திருவள்ளுவப் பயனும் இக் கருத்தை மெய்ப்பிக்கும்.

இவ்வுலக இன்பமும் அவ்வுலக இன்பமும் நிலையானதா? நிலையானதாக இருந்தால் இவற்றின் நிலையாமை யுணர்த்துதற்பொருட்டு நிலையாத கடன்என்று அறிவு நூல்கள் முழங்குவானேன்? இம்மை இன்பமும் துறக்க இன்பமும் இரண்டு உலகங்களையும் ஆதாரமாகக்கொண்டன. இரண்டு உலகங்களும் தத்தமக்கு அமைந்த கால எல்லையில் அழியும் தன்மையன. இதனை,

"நூறுகோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறுகோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறிலா தவன் ஈசன் ஒருவனே."

என்ற திருநாவுக்கரசர் தேவாரம் விளக்குகிறது. அழியும் தன்மையுள்ள உலகிடை உண்டாகும் இன்பமும் அழியும். ஆதலால் உலக இன்பங்கள் யாவும் 'பொய்' என்றும் மித்தை என்றும் ஆன்றோர்களால் கூறப்பெறுகின்றன.

பொய்யான இன்பத்தால் நமக்குப் பயன் உளதோ? இலது. நம்மை மெய்யான இன்பநிலைக்குக் கொண்டு செலுத்தும் வாயிலாக அமைந்துள்ளது இவ்வின்பங்கள்.

நிலையான இன்பம் பேரின்பம் அளிப்பது. சிற்பரச் செல்வம் பெற்றால் வீட்டின்பம் துய்க்கலாம். சிற்பரச் செல்வம் திருவருள் என்றும், சத்தி என்றும், இயற்கை என்றும், சென்றடையாத திரு என்றும் பேர் பெறும். இதனையுடையார் சிற்பரச் செல்வர். அவர் இறை, கடவுள், கர்த்தா, செம்பொருள், சிவம் முதலிய தமிழ்ப்பெயருடையவர். இச்செல்வர் துணையின்றி விடுபெற இயலாது. இறைவனை 'அருந்துணையை' என்பர் சைவப் பெரியார். துணைபெற என்செய வேண்டும்? துணைபெற்ற சீரடியார் வழிநடத்தல் வேண்டும். நால்வர், நம்மாழ்வார், ஆண்டாள், அருணகிரியார், தாயுமானுர், இராமலிங்கர் முதலிய தெய்வப் பெரியோர் துணைபெற்ற செல்வராவார்.

இறை நிலையுற்ற செல்வர் யாவரும் இறைவன் துணைபெற மனம் தூயதாகப் பெறல் வேண்டும் என்று அருளியுள்ளார்கள். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்பர் வள்ளுவர். மாசுடைய மனம் 'கல்' எனப்படும். 'மாச்சனகல்' என்னும் சுந்தரமூர்த்தி மாசாவது பொய்மையையும், பொய்யின்ற அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முதலிய தீய பண்புகளாம். பொய்மை நீக்க மெய்ந்நெறியில் நிற்றல் வேண்டும். மெய்முன்னர்ப்பொய் ஒளிமுன் இருளெனக்கெடும். மெய்ந்நெறியாவது இறைவனுல் அருளப்பட்ட, பொய்யினீங்கியதும், பொய்மை நீக்குவதுமாகிய 'பொய்தீர் ஒழுக்க நெறி'யாம். இதனை அறிவுறுத்துவது தெய்வத்திருக்குறளாகும். ஒழுக்க நெறியில் நிற்கும் மனம் மென்மையடையும். மென்மையடைந்த மனம் மலர் எனப்படும். மலர்நிலையில் மனம் எந்த வடிவில் சிவபொருளைச் சிந்திக்கிறதோ அந்த வடிவில் அக்கணத்தில் அவ் எழுந்தருளுவன் இறைவன். தூய்மையடைந்த மனங்கொண்டு, நெக்கு நெக்கு உருகி அழுதால் சிற்பரச் செல்வர் குருவடிவொடு தோன்றிச்சிற்பரச் செல்வராகப்பேரின்பம் தந்தருளுகிறார்.

"காதலாகி கசிந்துகண் ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதனும நமச்சி வாயவே."

—சித்தாந்தம்

## மனைவியைக்குத்திய புருஷன்

### எதிரிக்கு 2 மாதக் கடூழியம்

நல்லூரைச் சேர்ந்த இராசாவின் தோட்டம் ரோட்டில் வசிக்கும் இராமலிங்கத்தின் மனைவியார் நாகரத்தினத்திற்குப் புருஷன் இராமலிங்கம் கத்தியாற் குத்திக் காயம் விளைத்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின்பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு இரண்டு மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

ந-தி

## பிராணுயாமம்

பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

(முற்றொடர்)

மாதிவளர் பக்கமதிற் குறையும் பக்க
மதிநாடிகதிர் நாடி வளர் பொன்னோடிப்
பேறுமிகவுண்டாகு பிராணனிற்கும்
பின்புரைத்த காரியங்களொன்ன மேலாம்
கூறுகின்ற சனிநாளிற் பகலிரவிற்
குலவுசரம் வலமிடத்தே கோணு தோடில்
நாறுமலர்ப் பெருந்திருவே சொன்னே மிந்த
ஞாலமெக்கும் புழ்ந்து நெறவே கடக்கு மென்றே.

இதன் திரண்ட பொருள். வெள்ளிக்கிழமை புதன்கிழமை திங்கட்கிழமைகளில் (சந்திரநாடி) இடது மூக்கில் சுவாசம் நடக்க வேண்டும். செவ்வாய் சனி ஞாயிறு இந்தக்கிழமைகளில் (சூரியநாடி) வலது மூக்கில் சுவாசம் நடக்கவேண்டும், பூர்வபக்க வியாழக்கிழமையில் (சந்திரநாடி) இடது மூக்கில் சுவாசம் நடக்கவேண்டும், அபரபக்க வியாழக்கிழமையில் (சூரியநாடி) வலது மூக்கால் சுவாசம் நடக்க வேண்டும், சனிக்கிழமை இரவும் பகலும் (சூரியநாடி) வலது மூக்கால் சுவாசம் நடக்க வேண்டும்.

காலை 4 மணிமுதல் 6 மணிவரையில் மேலே காட்டிய கிழமைகளில் மேற் சொல்லிய நாடிகளில் சுவாசத்தை நிறுத்தி அப்பியாசஞ் செய்து வந்தால் தீர்க்காயுளோடு மோட்சமு முண்டு. சுவாசத்தைச் சூரியநாடியாகிய வலது மூக்கில் நிறுத்தி ஸவிந்த கருமங்களைச் செய்தபோதிலுந் தொடங்கிய கருமங்களெல்லாஞ் சித்தியாம.

